**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 274/2017**

**Deposition of P.W.6**

Name : திரு. பாரதிராஜா

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**25.03.2026**

A2 present. A1 absent. Petition filed and allowed.

முதல் விசாரணை–

நான் தற்போது தக்கலை காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். தக்கலை காவல்நிலைய குற்ற எண்.1873/2001 வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான திரு. ராஜகோபால் என்பவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு தொடர் சிகிச்சையில் இருந்து வருகிறார். எனவே, அவரை சாட்சியாக இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த இயலவில்லை. வழக்கு கோப்பின் அடிப்படையில் என்னால் சாட்சியம் அளிக்க முடியும். கடந்த 14.09.2001ம் தேதி 19.00 மணிக்கு தக்கலை காவல்நிலைய பொறுப்பில் இருந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. ஐயப்பன் என்பவரிடம் புகார்தாரர் முதல்நிலை காவலர் 1403 திரு. செல்வராஜ் என்பவர் கொடுத்த புகாரை பெற்று அவர் அதன் தன்மை படி நிலைய குற்ற எண். 1873/2001 பிரிவுகள் 294(பி), 353, 307 இ.த.ச படி

வழக்கு பதிவு செய்துள்ளார். அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல் ஆய்வாளர் திரு. ராஜகோபால் அவர்கள் பார்வைக்கு வைத்துள்ளார். 14.09.2001ம் தேதி 20.30 மணிக்கு புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடம் சென்று சாட்சிகள் வர்க்கீஸ், வின்செண்ட் ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.3, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4. பின்பு இவ்வழக்கின் சாட்சிகள் செல்வராஜ், அமல சத்தியதாஸ், தங்கராஜ், அருள்தாஸ், நேசமணி ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 16.09.2001ம் தேதி 04.30 மணிக்கு காட்டாத்துறை சந்திப்பு அருகே வைத்து இவ்வழக்கின் 1வது எதிரியை கைது செய்து விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.5. வெட்டுக்கத்தி ஒன்றை கைப்பற்றி படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். வெட்டுக்கத்தி சா.பொ.1. இவ்வழக்கின் சட்டப்பிரிவை 294 (பி), 353, 307 இ.த.ச–விலிருந்து 147, 148, 294 (பி), 353, 307 ஆக மாற்றம் செய்து 15.09.2001ம் தேதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த குற்ற மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6. பின்னர் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள், அத்தாட்சி சாட்சிகளை விசாரித்தும் சாட்சி ஜெயராஜ் (எ) ஜெகன் என்பவரை விசாரித்து TN 74 Z 8962 ஆட்டோ உரிமையாளர் என்பதையும் மற்ற விபரங்கள் குறித்தும் விசாரணை செய்துள்ளார். இருசக்கர வாகனமான TN 74 A 4645ன் உரிமையாளர் வசப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். காயம்பட்ட நபருக்கு காயச்சான்று வழங்கிய

மருத்துவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் சிறப்பு சார்பு ஆய்வாளர் சகாயஜோஸ் தலைமைக்காவலர் திரு. கிறிஸ்துதாஸ் வழக்கு பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. ஐயப்பன் ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து 09.05.2002ம் தேதி விசாரணையை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

பொய்யான புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.